(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

– – –

(அ) கோரிக்கை எண் 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

– – –

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் கோஷமிட்டனர்.)

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலில் துயிலுறும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடுகள்)

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.376,03,89,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.143,14,35,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டனர்.)